


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ மே. 21, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 226 ❖ ரூ.10

## ஸ்டெர்லைட் ஆலை திறப்பு வழக்கில் தமிழ்நாடு அரசு பதில் அளிக்க

# உத்தரவு

## வேதாந்தா நிறுவனத்தின் மேல்முறையீடு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் அடுத்த விசாரணையை ஜுலை மாதத்திற்கு ஒத்திவைத்தது.

டெல்லி, மே. 21:

ஸ்டெர்லைட் ஆலை வழக்கில், தமிழ்நாடு அரசு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பதில் அளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக 2018ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் அங்கு நடைபெற்ற காவல்துறை துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து 2018ஆம் ஆண்டு மே 28ஆம் தேதி ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டது.







இதை எதிர்த்து ஆலையை திறக்க வேண்டும் என கோரிக்கையுடன் வேதாந்தா நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் ஆலை மூடலுக்கான அரசின் உத்தரவு தொடரும் தீர்ப்பளித்த வேதாந்தாவின் மனுவை தள்ளுபடி செய்தது. உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக வேதாந்தா நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளது.

அதில், ஸ்டெர்லைட் ஆலையை திறக்கும் வரை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்க கோரி, ஆலை தரப்பில் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஸ்டெர்லைட் ஆலை தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிக்க வேண்டுமெனவும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இவற்றை உச்ச நீதிமன்ற நீதிபதி சந்தருசூட் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது. நேற்றைய விசாரணையில், ஆலையில் இருந்து 11 மில்லியன் டன் அளவிலான ஜிப்சம் நீக்கப்பட்டுள்ளதாக வேதாந்தா கூறிய நிலையில், 4 புள்ளி 5 மில்லியன் டன் மட்டுமே நீக்கப்பட்டுள்ளதாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்டெர்லைட் வளாகத்தில் பல மில்லியன் டன் அளவில் ஜிப்சம் நீக்கப்படாமல் உள்ளதாகவும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்கூறியது. அதனை கேட்டுக்கொண்ட நீதிபதிகள், தமிழ்நாடு அரசு மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் பதில் தர உத்தரவிட்டு ஜுலை மாதம் இரண்டாம் வாரத்தில் அடுத்த விசாரணை நடைபெறும் என கூறி வழக்கை ஒத்திவைத்துள்ளது



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 124வது உதகை மலர் காட்சியினை தொடங்கிவைத்து, நீலகிரி மாவட்டத்தில் பழங்குடி பெரும்பாலான தோடர், இருளர், குரும்பர், பாணியர், கோத்தர் மற்றும் காற்று நாயகர்களை பெருமைப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ள மலர் அலங்காரத்தினை பார்வையிட்டார். விழாவில் அமைச்சர்கள் எம்ஆர்கே பன்னீர்செல்வம், ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, எம்எல்ஏ கணேஷ், கலெக்டர் அம்ரித், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் பிருந்தாதேவி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்டாலினுக்கு பின்பு உதயநிதி ஸ்டாலின் முதல்வராக தயாராக இருக்கிறார்: அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்

ஸ்ரீவில்லிப்புத்தூர், மே. 21:

10 வருட கேடு கெட்ட ஆட்சி நடைபெற்றது. நமது ஆட்சி நல்ல ஆட்சி நல்ல முதல்வர். ஒரு அண்ணனாக, தகப்பனாக குடும்பத்தின் தலைவராக ஸ்டாலின் உள்ளார் என்று அவர் தெரிவித்தார்.

ஸ்டாலினுக்கு பின்பு உதயநிதி ஸ்டாலின் முதல்வராக தயாராக இருக்கிறார் என அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூரில் நடைபெற்ற திமுக அரசின் ஓராண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், இந்த மண்ணை தொட்டு கும்பிட்டால் ஒவ்வொரு வீட்டையும் தொட்டு கும்பிடுவதை போன்று, ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கும்பிட முடியாது. நல்ல பிள்ளையாக நடந்தால் தான் அடுத்து எம்.பி தேர்தலில் வெற்றி பெறமுடியும்.

இன்னும் 20 ஆண்டுகள் வரை நமது மு.க.ஸ்டாலின் தான் முதல்வர். திமுகவை எதிர்த்து சண்டை போட ஆளே இல்லை. முதலில் நீங்கள் சேர்ந்து கொண்டு பின்பு சண்டைக்கு வாருங்கள் என அதிமுகவை சாடினார்.



ஸ்டாலினுக்கு பின்பு உதயநிதி ஸ்டாலின் முதல்வராக தயாராக இருக்கிறார். வாரிசாக இருந்தாலும் கஷ்டப்பட்டுதான் மேலே வருகிறார்கள். 10 வருட கேடு கெட்ட ஆட்சி நடைபெற்றது. நமது ஆட்சி நல்ல ஆட்சி நல்ல முதல்வர். ஒரு அண்ணனாக, தகப்பனாக குடும்பத்தின் தலைவராக ஸ்டாலின் உள்ளார். அதிமுக கஜானாவை சுரண்டி விட்டார்கள். திமுக வந்து பார்த்த உடன் கஜானாவில் ஒன்றும் இல்லை. வெறும் பெட்டி 1 ரூபாய் காசு கூட இல்லை. பெட்டியை திறந்தால் கடன் பேப்பர் மட்டுமே உள்ளது.

திமுக ஆட்சியில் பெண்களுக்கு தான் யோகம், உங்க கையில் பணம் கொடுத்தால் பணம் வீடு சேராது என தெரிந்து தலைவர் பெண்களுக்குபணம்கொடுத்து வருகிறார். உங்களிடம் பணம் கொடுத்தால் சாராய கடைக்குதான் செல்லும். டெல்லிக்கு பயப்படாத ஒரு தலைமை நமது தலைமை, எடப்பாடி அங்கே தலையை குணிந்து விடுவார். மோடி முன்பு மாப்பிள்ளை போல் ஸ்டாலின் அமர்கிறார் என்று அவர் கூறினார்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்








| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,793 | Rs.5,192 |

## வரலாற்றில் இன்று



1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

# திருவரங்குளம் அருகே டீக்கடையில் இலங்கைக்கு உதவிட மொய் விருந்து



புதுக்கோட்டை மே.21-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் அருகே உள்ள மேட்டுப்பட்டி இந்திரா நகரில் பகவான் டீ ஸ்டால் என்ற பெயரில் டீக்கடை நடத்தி வருபவர் சிவக்குமார். இவர் இலங்கையில்பொருளாதார நெருக்கடியால் அவதிக்கு உள்ளாகி வரும் பொதுமக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு டீக்கடையில் வரும் ஞாயிற்றுக்கிழமை 22ஆம் தேதி தேநீர் அருந்தி விட்டு மொய் செய்திட மொய் விருந்து என்ற அறிவிப்பு வைத்துள்ளார்.

இவர் கடந்த 2018ஆம் ஆண்டு கஜா புயலின் போது ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக அப்பகுதியில்உள்ள தனது வாடிக்கையாளர்கள் தனது கடையில் வைத்திருந்த தேநீர் பாக்கியை தள்ளுபடி செய்து அவர்களுக்கு தன்னால்முடிந்தஉதவியை செய்தார். தற்போது பல்வேறு சமூகப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் சிவக்குமாரின் மொய் விருந்து அறிவிப்பு இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தை இப்பகுதி பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் பாராட்டி வரவேற்றுள்ளனர்.




# ஒட்டன்சத்திரம் அருகே மினிவேன் மோதி இருசக்கர வாகனத்தில் சென்ற 3 பேர் பலி



திண்டுக்கல் மே.21-

ஒட்டன்சத்திரம் அருகே மினி வேன் மோதிய விபத்தில் இரண்டு இருசக்கர வாகனங்களில் சென்ற பெண் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், தாராபுரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தங்கச்சியம்மாபட்டி வாய்க்கால் பாலம் அருகே நிலக்கோட்டையில் இருந்து பூக்கள் ஏற்றிக்கொண்டு கோவை நோக்கி சென்ற மினிவேன் சாலையை கடக்க முயன்ற இருசக்கர வாகனம் மீது மோதி நிலை தடுமாறி சாலையில் எதிரே வந்த மற்றொரு இருசக்கர வாகனம் மீது கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தால் இரண்டு இருசக்கர வாகனங்களில் வந்த பெண் உட்பட மூன்று பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். ஒத்தையூரைச் சேர்ந்த கருப்புச்சாமி, ஹவுசிங் போர்டைச் சேர்ந்த சந்திரன் மற்றும் அவரது மனைவி சந்திரகலா ஆகிய மூன்று பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இச்சம்பவம் குறித்து அம்பிளிக்கை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உதகையில் 124வது மலர் கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



நீலகிரி மே.21-

உதகையில் 124வது மலர் கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்தியாவில் உள்ள மலை வாசஸ்தலங்களில் நீலகிரி மாவட்டம் தனக்கென தனி இடத்தை பிடித்துள்ளது. இதனால் நீலகிரி மாவட்டத்தில் நிலவும் இதமான காலநிலை மற்றும் இயற்கை வளம் மிகுந்த வனப்பகுதிகள் மற்றும் சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்க தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். சுற்றுலா பயணிகளை மேலும் கவரும் விதமாக ஆண்டு தோறும் மே மாதத்தில் கோடை விழா நடத்தப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா காரணமாக ஆன்லைன் வாயிலாக கண்காட்சி நடந்தது. மக்கள் வீட்டில் இருந்தபடி தாவரவியல் பூங்காவில் வைக்கப்பட்டிருந்த பல்வேறு வண்ண செடிகளை கண்டு ரசித்தனர்.

தற்போது தொற்று முழுவதும் குறைந்து சுற்றுலா பயணிகள் வருகையும் கடந்த சில மாதங்களாக அதிகரித்த வண்ணம் உள்ளது. இதையடுத்து 2 ஆண்டுகளுக்கு பிறகு ஊட்டி தாவரவியல் பூங்காவில் 124-வது மலர் கண்காட்சி நேற்று முதல் தொடங்கி வருகிற 24-ந் தேதி வரை 5 நாட்கள் நடக்கிறது. இந்த கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை 10 மணிக்கு தொடங்கி வைத்தார். அதன் பின்னர் மலர் மாடங்களை பார்வையிட்டார். தமிழக அரசின் மீண்டும் மஞ்சப்பை திட்டம் குறித்து மலர் கண்காட்சியில் 1000 ரோஜாக்களை கொண்டு மஞ்சப்பை வடிவமைக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில், மலர்கண்காட்சியைமுன்னிட்டு நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் நேற்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

# இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்த படகுகளை மீட்டுத்தரக் கோரி ராமேஸ்வரம் அருகே மீனவர்கள் உண்ணாவிரத போராட்டம்



ராமேஸ்வரம் மே.21-

ராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடத்தில் மீனவர்கள் உண்ணாவிரத போராட்டம்.

கடந்த 2018 ஆம் ஆண்டு முதல்2022ஆம்ஆண்டுவரை ராமேஸ்வரம், மண்டபம், ஜெகதாபட்டினம், கோட்டைபட்டினம், நாகப்பட்டினம் மற்றும் காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் படகுகளை இலங்கை கடற்படை பறிமுதல் செய்துள்ளது.இந்நிலையில், இலங்கை வசமுள்ள அனைத்து விசைப்படகு, நாட்டுபடகுகளை மீட்டுத்தரக் கோரி மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி ராமேஸ்வரம் அடுத்த தங்கச்சிமடத்தில் மீனவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற்கரை பகுதியில் 60 லட்சம் மீனவர்களை வெறும்வாக்குவங்கிகளாக மட்டுமேஅரசியல்கட்சிகள் பயன்படுத்திவருகின்றனர். கடந்த 75 வருடங்களாக மீனவர்களுக்காக அரசியல் பிரதிநிதித்துவம் அரசியல் கட்சிகளால் மறுக்கப்பட்டு வருகின்றது. இதுவரை தமிழகத்தில் இருந்து மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களில் ஒருவர் மட்டுமே மீனவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

இதனால் தமிழகத்தில் உள்ள மீனவர்களுக்கு, இலங்கை கடற்படை பிரச்சனை உள்ளிட்ட பல்வேறு மீனவ பிரச்சனைகளை அரசிடம் கொண்டு சேர்க்க மீனவர்களுக்கு சரியான அரசியல் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே மீனவர்களுக்கு ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவியை அரசியல்கட்சிகள் ஒதுக்கீடு செய்து தர வலியுறுத்தி மீனவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சென்னை நுங்கம்பாக்கத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் கூட்டம்




சென்னை மே.21-

சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்து அனைத்து அலுவலர்களுடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ராமேஸ்வரம் ராமநாத சுவாமி திருக்கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர்திருக்கோயில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் தொடங்குவது தொடர்பாகவும், திருக்கோயில்யானைகளுக்கு புதிய குளியல் தொட்டி அமைப்பது தொடர்பாகவும், மாதந்தோறும் பௌர்ணமி தினங்களில் 12 பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களில் 108 திருவிளக்குப் பூஜைகள் நடத்துவதுதொடர்பாகவும், ராமேஸ்வரம் ராமநாத சுவாமி திருக்கோயிலில் இருந்து காசி விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்கு ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்வது தொடர்பாகவும்ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் பி. சந்திரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையர்கள் இரா. கண்ணன், ந.திருமகள், சி.ஹரிப்ரியா மற்றும் அனைத்து மண்டல அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# மேட்டுப்பாளையத்தில் திருமணமான 6 மாதத்தில் பெண் மருத்துவர் தூக்கிட்டு தற்கொலை



மேட்டுப்பாளையம் மே.21-

திருமணமான ஆறே மாதத்தில் பெண் மருத்துவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் மேட்டுப்பாளையத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் ஆர்.டி.ஓ விசாரணை நடந்து வருகின்றது.

மேட்டுப்பாளையம் கூட்டுறவு காலனியை சேர்ந்தவர் அபிஷேக் (30). இவர் கோபிசெட்டி பாளையத்தில் ஜவுளிக்கடை வைத்துள்ளார். இவரது மனைவி ராசி (27). இவர்கள் இருவருக்கும் திருமணமாகி 6 மாதங்கள் ஆகிறது. இவர்களில் ராசி கடந்த 2020ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ் படித்து முடித்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். மேற்கொண்டு முதுகலை மருத்துவப் படிப்பிற்காக நீட் தேர்வு எழுத தயாராகி வந்துள்ளார். மேட்டுப்பாளையம் காட்டூர் பகுதியில் உள்ள தனது பெற்றோர் வீட்டில் தங்கி நீட் தேர்வுக்கு படித்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் மருத்துவர் ராசி வீட்டின் மூன்றாவது மாடியில் படிக்கச் செல்வதாக கூறிவிட்டு சென்ற நிலையில், அறையில் இருந்த மின் விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். நீண்ட நேரம் ஆகியும் ராசி இருந்த அறையில் இருந்து வெளியே வரவில்லை என்பதால் சந்தேகமடைந்த அவரது தாயார் செந்தாமரை, மாடிக்கு சென்று பார்த்துள்ளார். அப்போது கதவு உள்பக்கம் தாழிட்டிருந்ததால் அருகில் இருந்த ஜன்னல் வழியாக பார்த்த போது ராசி மின்விசிறியில் துப்பட்டாவால் தூக்கு போட்டு கொண்டிருப்பது தெரிய வந்திருக்கிறது. இதனால் அதிர்ச்சியடைந்த அவர், அக்கம்பக்கத்தினரை உதவிக்கு அழைத்துள்ளார்.

சம்பவம் குறித்து மேட்டுப்பாளையம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப் பட்டதையடுத்து, போலீசார் சென்று அறைக்கதவை உடைத்து மருத்துவர் ராசியின் உடலை மீட்டு உடற்கூறு ஆய்விற்காக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். திருமணமான 6 வது மாதத்தில் பெண் மருத்துவர் ராசி தற்கொலை செய்து கொண்டதால் ஆர்.டி.ஓ.விற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் தலைமையில் விசாரணை நடைபெறுகிறது. இளம் மருத்துவரின் தற்கொலைக்கு குடும்ப பிரச்சனை காரணமா அல்லது நீட் தேர்வுக்கு தயாராகி வந்த நிலையில் தற்கொலை செய்து கொண்டதால் தேர்வு அச்சம் காரணமா என்ற இரு வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்று வருவதாக சொல்லப்படுகிறது.

# தஞ்சாவூர் தலைமை அஞ்சலகத்தில் கொரோனா தடுப்பூசி முகாம்




தஞ்சாவூர் மே.21-

தஞ்சாவூர் சுகாதார துறை அலுவலகமும், சாதி தொண்டு நிறுவனமும், யூஎஸ்-எய்ட்டு மற்றும் மொமெண்டம் தொண்டு நிறுவனங்களும் தஞ்சாவூர் தலைமை அஞ்சலகத்துடன் இணைந்து நடத்திய கொரோனா தடுப்பூசி முகாம் தஞ்சாவூர் தலைமை அஞ்சலகத்தில் நடைபெற்றது. இம்முகாமினை தஞ்சாவூர் தலைமை அஞ்சலகத்தின் முதுநிலை அஞ்சலக தலைவர் அருள்தாஸ் தலைமையேற்று தொடங்கி வைத்தார்.

முன்னதாக தஞ்சாவூர் தலைமை அஞ்சலக துணை அஞ்சலக தலைவர் குழந்தைராஜ் வரவேற்புரை வழங்கினார். இம்முகாமிற்கு தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். தஞ்சை மாவட்ட நகர சுகாதார அலுவலர் நமச்சிவாயம் மற்றும் மகர்நோம்புச்சாவடி மருத்துவ அலுவலர் லக்ஷ்மணன் ஒத்துழைப்போடு, தஞ்சை மாவட்ட சாதி நிறுவனத்தில் பணிபுரியும் தீனதயாளன், முகமது ஷெரிப் இந்த முகாமை சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். இந்த முகாமில் மகர்நோம்புச்சாவடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் செவிலியர்கள் அலுவலர்கள் சாரதா, சாந்தி, மணிமேகலை மற்றும் சோனாலி ஆகியோரும் முகாமினை சிறப்பாக நடத்தினர். தஞ்சாவூர் தலைமை அஞ்சலகத்தின் ஊழியர்கள், தஞ்சாவூர் நகர்ப்புற துணை அஞ்சலகத்தின் ஊழியர்கள் அவர்களின் குடும்பத்தார்களும் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். முகாமின் நிறைவாக தஞ்சாவூர் தலைமை அஞ்சலக அலுவலர் சரவணன் நன்றியுரை வழங்கினார்.

மேலும் முகாமில் தஞ்சாவூர் வடக்கு உபகோட்டத்தின் உதவி கண்காணிப்பாளர் பழனிசாமி மற்றும் தஞ்சாவூர் அஞ்சலக கோட்ட தலைமையிடத்து உதவி கண்காணிப்பாளர் பிரேமானந்த் மற்றும் அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர். ஆதார் சேவைக்காக வந்த பலரும் கொரோனா தடுப்பூசி போட்டு கொண்டனர். முகாமில் கோவாக்சின், கோவிட்ஷில்ட் முதல் தவணை, இரண்டாம் தவணை மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகள் போடப்பட்டது.

# அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம்



கந்தர்வக்கோட்டை மே.21-

அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பெற்றோர், ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பெற்றோர், ஆசிரியர் கழக தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மருத்துவர் சுவாமிநாதன் பள்ளி வளர்ச்சிக்கு ஆலோசனைகளை வழங்கி பேசிய போது விரைவில் கல்வி சீர் விழா நடத்தப்படும் என தெரிவித்தார்.

கடந்த ஆண்டை விட அதிகமான மாணவர்களை பள்ளியில் சேர்க்க பெற்றோர் முயற்சிக்க வேண்டும் எனவும் பேசினார். தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி வரவேற்றார். இந்நிகழ்வில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வீராசாமி, பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர் அச்சுதன் முன்னிலை வகித்தார்.

இதுவரை இணைந்துள்ள புரவலர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. புரவலர் நிதியில் வரும் தொகையை பள்ளி வளர்ச்சிக்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் புரவலர் நிதியில் வரும் வருவாயில் அச்சு நகல் இயந்திரம், ஒலி பெருக்கி வாங்குவது மற்றும் இன்னும் அதிகமான புரவலர்களை பள்ளியில் சேர்க்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் பட்டதாரி ஆசிரியர்கள் ரகமதுல்லா, ஆனந்தராஜ், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் தேவிகா, சத்யா, சீதாலெட்சுமி, கலாராணி, ரஞ்சிதா, பழனிவேல், சித்ரா, இலக்கியா, ருக்மணி, மகேஸ்வரி, அன்புநதி ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவாக ஆசிரியர் வெள்ளைச்சாமி நன்றி கூறினார்.

# திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மாணவ மாணவியர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்



திருவள்ளூர் , மே. 21;

திருவள்ளூர் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக அரசு பள்ளிகளில் 8-வது ,9-வது மற்றும் 11-ம் வகுப்பு பயிலும் 100 பழங்குடியின மாணவ, மாணவியர்களின் தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து, அவர்களுக்கு கல்வியின் மீது ஆர்வத்தை தூண்டும் வகையில்,சுய சிந்தனையையும், தொலைநோக்கு பார்வையையும்வளர்க்கும் விதமாகவும், செயல்பட்டு வரும் " சிறகுகள் 100 " என்ற திட்டத்தின் மூலம் பயன் பெற்று வரும் மாணவ,மாணவியர்களின் வாழ்வியல் திறன்களை மேம்படுத்தவும், பல்கலை நிபுணர்களுடன் சந்திக்க எதுவாகவும், 20.05.2022 முதல் 29.05.2022 வரை 10 நாட்கள் நடைபெறுவதுண்டு. உறைவிட கோடைக்கால சிறப்பு முகாம் பழைய திருப்பாச்சூர், ஸ்ரீ ராமகிருஷ்ணா மெமோரியல் பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆல்பி ஜான் வர்கீஸ் துவக்கி வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆறுமுகம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சீனிவாசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பூபால முருகன், மாவட்ட கல்வி அலுவலர் ( திருவள்ளூர் ) எல்லப்பன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் நிஷாந்தி, தொண்டு நிறுவன இயக்குநர் ஸ்டீபன், இந்திய எழுத்தறிவு திட்ட தேசிய மேலாளர் ரங்கராஜன், ஸ்ரீ ராமகிருஷ்ணாமெமோரியல் பள்ளிமுதல்வர்சாந்தகுமாரி, பள்ளி தாளாளர் குணா, தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு மாநில தலைவர் அருணன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# 100 நாள் வேலை – வட்டார வளர்ச்சி அலுவலர் ஆய்வு



நாகப்பட்டினம், மே.21–

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் நெய்க்குப்பை ஊராட்சி கரம்பை பகுதியில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் 100 நாள் பணிகள் நடைபெறும் இடத்திற்கு சென்று திருமருகல் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பாத்திமா ஆரோக்கியமேரி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது நெய்க்குப்பை ஊராட்சி பகுதிகளில் உள்ள மொத்த 100 நாள் பணியாளர்கள் விபரம், பணிபுரியும் பணியாளர்களின் விபரம் மற்றும் கையேடுகளை ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து வாய்க்கால் தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு அறிவுரைகள் வழங்கினார். ஆய்வின் போது ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி ராமலிங்கம், துணைத் தலைவர் ராமதாஸ், ஊராட்சிசெயலாளர்ஜீவா, பணி மேற்பார்வையாளர் செல்லப்பாண்டியன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# கடக்கம் அகர ஆதனூர் புற்றடி மாரிஅம்மன் ஆலயத்தில் தீமிதி உற்சவம்



தரங்கம்பாடி,மே.21:

மயிலாடுதுறை மாவட்டம் பெரம்பூர் அருகே அகர ஆதனூர் புற்றடி மாரியம்மன் ஆலயம் தீமிதி உற்சவம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தீ மிதித்தனர்.

கடக்கம் அகரஆதனூர் கிராமத்தில் பழைமை வாய்ந்தபுற்றடி மாரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தின் 86 ம் ஆண்டு தீமிதி திருவிழா கடந்த 6ம் தேதி காப்புகட்டுதலுடன் துவங்கியது. தீமிதி உற்சவத்தை முன்னிட்டு குளக்கரையிலிருந்து மேளம் முழங்க கரக ஊர்வலம் துவங்கியது. 20 அடி நீள அலகு காவடி, சக்தி கரகம் ஆகியவை ஊர்வலமாக ஆலயத்தினை வந்தடைந்தன.

அங்கு தீக்குண்டத்தில் விரதம் இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீமிதித்து தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர். விழாவில் ஆயிரக்கணக்கானபக்தர்கள் பங்கேற்று மாவிளக்கு தீபமிட்டு அம்மனை வழிபாடு செய்தனர். தொடர்ந்துஅம்மன்வீதியுலா நடைபெற்றது. பூரண பரம்பரை அறங்காவலர் தம்பி.பாலவேலாயுதம் குடும்பத்தினர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

### மேலப்பாதி நடுக்கரை கிராமத்தில் வசிக்கும்

# விளிம்பு நிலை மக்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைக்கான ஆணை வழங்கள்



தரங்கம்பாடி, மே- 21;

பொருளாதாரத்தில் விளிம்பு நிலையில் வசித்து வரும் மக்களுக்கு அனைத்து அரசு நலத்திட்டங்களும் கிடைக்கவேண்டும் என்ற தமிழக அரசின் உத்தரவின் பேரில் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம், மேலப்பாதி நடுக்கரை கிராமத்தில் காவிரிக்கரை ஓரத்தில் வசித்துவரும் குடும்ப அட்டை இல்லாத உரிக்கார நாயக்கர் மற்றும் குறவர் சமூக மக்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்குவதற்காக தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலரால் வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் கணக்கெடுப்பு நடைபெற்றது.

அவர்களுக்கு தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலகத்தில் இணையதளம் வாயிலாக மின்னணு குடும்ப அட்டை விண்ணப்பம் செய்யப்பட்டு, தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலரால் உடனடியாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆறு குடும்பங்களுக்கும் புதிய மின்னணு குடும்ப அட்டைக்கான ஒப்புதல் ஆணையினை தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு ஜமாபந்தி அலுவலரும் சீர்காழி வருவாய் கோட்ட அலுவலருமான நாராயணன் வழங்கினார்.

மேற்படி நிகழ்ச்சியில் தரங்கம்பாடி வட்டாட்சியர் புனிதா, தனி வட்டாட்சியர் இந்துமதி, வட்ட வழங்கல் அலுவலர் பாபு, ஓயாசிஸ் வட்ட பொறியாளர் ஐயப்பன், திருவிளையாட்டம் சரக வருவாய் ஆய்வாளர் கவிதா, கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத் தலைவர் பன்னீர்செல்வம், துணைத்தலைவர் சிவசங்கர், செயலாளர் செல்வகுமார், கிராம நிர்வாக அலுவலர்கள் முருகன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



திருவள்ளூர் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் பேரறிவாளன் விடுதலையை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் வாயில் வெள்ளை துணி கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் ஏ.ஜி சிதம்பரம் தலைமை வெள்ளைத்துணி வாயில் கட்டிக்கொண்டு அறவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் காங்கிரஸ் கட்சியில் திருவள்ளூர் நகர மன்ற உறுப்பினர் வக்கீல் வீ .இ. ஜான் முன்னிலை வகித்தார் ஆர்ப்பாட்டத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆனந்தன் சி.பி. மோகன் தாஸ் அருள்மொழி வடிவேலு தளபதி மூர்த்தி சரஸ்வதி ரகுராமன் இ.கே. ரமேஷ் பழனி எம்.கே மணவாளன் வழக்கறிஞர் கே .ஜி புருஷோத்தமன் உள்பட திரளானோர் கலந்து கொண்டனர்

# சீர்காழியில் உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்றம் சார்பாக நெஞ்சுக்கு நீதி திரைப்படத்திற்கு உற்சாக வரவேற்பு



சீர்காழி , மே. 21;

சீர்காழியில் உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்றம் சார்பாக நெஞ்சுக்கு நீதி திரைப்படத்திற்கு உற்சாக வரவேற்பு எம்எல்ஏ பன்னீர்செல்வம் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி திரைப்படத்தை கண்டு களித்தார்.

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி எம்எல்ஏ, திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் உருவான நெஞ்சுக்கு நீதி திரைப்படம் வெளியானது.மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்றத்தினர் பட்டாசு வெடித்து மேளதாளம் முழங்க ஊர்வலமாக சென்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.


இதில் சீர்காழி எம்எல்ஏ பன்னீர்செல்வம் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி திரைப்படத்தை அவரது ரசிகர்கள் மத்தியில் அமர்ந்து கண்டு களித்தார். இதில் ஒன்றிய பெருந்தலைவர்கள் கமலஜோதி தேவேந்திரன், ஜெயபிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் சசிகுமார், பிரபாகரன் ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், நகர செயலாளர் சுப்புராயன் மற்றும் உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்றத்தினர் திரளானோர் கலந்து கொண்டனர்.



மதுரை பழங்காநத்தம் பகுதியில் உள்ள அருள்மிகு சித்தி விநாயகர், ஸ்ரீ வள்ளி தேவசேனா சுப்ரமணிய சுவாமி, அருள்மிகு துர்க்கை மற்றும் அனுமன் ஆலயத்தின் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு முதல் நாள் நிகழ்ச்சியான யாகசாலை பூஜை நடைபெற்றது. விழாவில் நிர்வாகஸ்தர்கள் கண்மணி அம்மாள் மற்றும் ராஜ்குமார் கூறுகையில் நேற்று வெள்ளிக்கிழமை பஞ்சமி திதியும் உத்திராட நட்சத்திரம் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் ஒன்பது மணிக்கு பத்தரை மணிக்குள் கும்பாபிஷேகம் நடைபெற்றதாகவும் மேலும் கோவில் அமைக்க 55 வருடங்கள் ஆகின என்று கூறினார். கும்பாபிஷேகத்தை மகன் ராஜ்குமார் தலைமை தாங்கி நடத்துவார் என்று ராமகிருஷ்ணா மடத்தின் உரிமையாளர் கண்மணி அம்மாள் கூறினார். உடன் நிர்வாகிகள் கந்தப்பன், ராஜா, நாகராஜன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### மணமேல்குடி அருகே

# நாட்டுப் படகில் மீன் பிடிக்கச் சென்று மாயமான 4 மீனவர்கள் பத்திரமாக மீட்பு



மணமேல்குடி மே.21–

மணமேல்குடி அருகே நாட்டுப் படகில் மீன் பிடிக்கச்சென்று மாயமான 4 மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி அருகே பொன்னகர் பகுதியில் இருந்து நாட்டுப்படகில் 4 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றுள்ளனர். அவர்கள் நள்ளிரவில் கரை திரும்ப வேண்டிய நிலையில், அவர்கள் கரை திரும்பாத காரணத்தால் அவர்களை கடலோர காவல் படை அதிகாரிகள் மற்றும் சகா மீனவர்கள் தீவிரமாக தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், மாயமான 4 மீனவர்களும் மீட்கப்பட்டுள்ளதாக கடலோர காவல் படை தெரிவித்துள்ளது. இது குறித்து அவர்கள் கூறுகையில், படகில் பழுது ஏற்பட்டதால், படகு கவிழ்ந்து கடலில் தத்தளித்த மீனவர்களை சக மீனவர்கள் மீட்டதாகவும் மேலும் அவர்கள் பத்திரமாக கரைக்கு அழைத்து வரப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

# தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்– பூம்புகார் எம்எல்ஏ நிவேதா எம் முருகன் பங்கேற்பு



தரங்கம்பாடி, மே. 21;

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் அருகே ஈச்சங்குடி யிலுள்ள வசந்த முருகு பாலிடெக்னிக் கல்லூரியில் வேலை வாய்ப்பு முகாம் நேற்று நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் பி.கண்ணன் தலைமை வகித்தார், கல்லூரியின் நிர்வாகி பாலமுருகு முன்னிலையில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு வெளிநாடுகளைச் சேர்ந்த ஒன்பது பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரிய நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளை சார்ந்த மூன்றாம் ஆண்டு கல்லூரியின் மாணவ மாணவிகள் அனைவர்களுக்கும் பணி ஆணைகளை வழங்கி வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.

இதில் நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் மு.ஞானவேலன், செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் எம். அப்துல்மாலிக், ஈச்சங்குடி ஊராட்சி மன்ற தலைவர் உதயகுமார், கல்லூரியின் துணை முதல்வர் மணிகண்டன் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட திமுக பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் கல்லூரியின் அலுவலர் தேவிகா வேந்தன் நன்றி கூறினார்.

# ஆரணியில் அருள்மிகு ஸ்ரீகாவம்மா– மாரைய்யா திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

ஊத்துக்கோட்டை, மே21–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பெஸ்த தெருவில் அருள்மிகு ஸ்ரீகாவம்மா-மாரைய்யா திருக்கோவில் உள்ளது. பழமை வாய்ந்த இக்கோவிலை தெருவில் உள்ள பொதுமக்கள் புதிப்பித்து நேற்று காலை மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

இதை முன்னிட்டு கடந்த புதன்கிழமை காலை கணபதி பூஜை,கணபதி ஹோமங்கள் உள்ளிட்டவை தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்நிலையில், நேற்று காலை மஹா பூர்ணாகுதி நடைபெற்றது. பின்னர்,புனித நீர் அடங்கிய கலசங்கள் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. காலை 10 மணிக்கு கோயில் கோபுரம் மற்றும் மூலவருக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

கும்பாபிஷேக விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் மோகன், பாலாஜி, பாலு, சேகர் மற்றும் பெஸ்த தெருவை சேர்ந்த கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில், ஆரணி பேரூர் முன்னாள் திமுக செயலாளர் பி. முத்து, ஆரணி பேரூராட்சி 5-வது வார்டு உறுப்பினர் சுகன்யா தினேஷ்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.கோவிலுக்கு வந்திருந்த பக்தர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

# சொத்துவரி குறித்து திட்டச்சேரி பேரூராட்சி மன்ற அவசரக்கூட்டம் எதிர்ப்பு தெரிவித்து 3 கவுன்சிலர்கள் வெளிநடப்பு



நாகப்பட்டினம், மே.21–

பேரூராட்சிகள் உள்ளிட்ட நகர்புறங்களில் உள்ள குடியிருப்பு, வணிக கட்டிடங்கள் மற்றும் காலிமனைகளுக்கான சொத்துவரியினை 25% முதல் 100% வரை தமிழ்நாடு அரசு உயர்த்த அரசாணை பிறப்பித்தது. அரசு அறிவித்த அதே விகிதத்தில் வரி உயர்வை இறுதிசெய்து மன்ற அனுமதிக்காக பேரூராட்சிமன்றகூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய மனிதநேய ஜனநாயக கட்சி கவுன்சிலர் செய்யது ரியாசுதீன் ஒரேடியாக இவ்வளவு சதவீத வரி உயர்வு என்பது மக்களை பெரிதும் பாதிக்கும். அரசு இந்த வரிஉயர்வை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என தான் எழுத்துபூர்வமாக மனு அளித்து சுட்டிகாட்டினார். அதேபோல் வரி உயர்வு தொடர்பாக பொதுமக்களின் கருத்துகள் மற்றும் ஆட்சேபனைகளை பெற பத்திரிக்கை வாயிலாக அறிவிப்பு செய்து 30 நாட்கள் (மே 13 வரை) அவகாசம் கொடுத்ததாகவும்,அதில் ஒரு மனு மட்டும் பெறப்பட்டு அதற்கு பதில் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பேரூராட்சி பொது அறிவிப்பு பலகையிலும் கடைசி 10 நாட்கள் (மே 4 முதல்) மட்டுமே ஒட்டப்பட்டது. பொதுமக்களுக்கு சென்றடைந்தால் தானே அவர்கள் மனு அளிப்பார்கள். அவர்களுக்கு தகவலே தெரியவில்லை, பிறகு எப்படி மனு அளிப்பார்கள்? என கேள்வி எழுப்பினார். மேலும் அவசரகதியில் மக்களின் கருத்துகள் மற்றும் ஆட்சேபனைகளை பெறாமல் அரசு நிர்ணயம் செய்த விகிதத்தை அப்படியே அமல்படுத்திட செய்யும் நடவடிக்கைகளை கண்டித்து, தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சுயேச்சை கவுன்சிலர் ஷேக்அப்துல் பாசித், மனிதநேய ஜனநாயக கட்சி கவுன்சிலர் செய்யது ரியாசுதீன், மனிதநேய மக்கள் கட்சி கவுன்சிலர் சுல்தான் ரிதாவுதீன் ஆகியோர் வெளிநடப்பு செய்தனர்.

### சீர்காழி அருகே புதர்மண்டி கிடக்கும் ஆறு மற்றும்

# பாசன வாய்க்கால், மழை காலம் துவங்கும் முன்பாக தூர்வார அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்



சீர்காழி , மே. 21;

மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழி அருகே வைத்தீவரன்கோவிலில் பகுதியில் கோவிலார் வடிகால், திருநகரி வாய்கால் அமைந்துள்ளது. இங்குள்ள கோவிலார் வடிகால் ஆற்றை நம்பி 10 க்கும் மேற்பட்ட கிராமங்ளை சேர்ந்த 2280 ஏக்கர் விளைநிலங்களும், வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சிக்கு உட்பட்ட 2000 குடியிருப்புகளுக்கு வடிகாலாகவும் உள்ளது.

அதே போல் அருகில் உள்ளதிருநகரிவாய்க்கால் பாசனத்திற்கும் மழை காலங்களில் உபரி நீர் வெளியேற்றவும் பயன்பட்டு வருகிறது. இந்த இரண்டு பிரதான ஆறுகள் வாய்க்கால்கள் தற்போது கோரைபுல் மற்றும் செடி கொடிகள் முளைத்து புதர்மண்டி கிடக்கிறது. மழைகாலத்தின் போது ஆற்றில் தண்ணீர் செல்லாததால் விவசாயமும், குடியிருப்புகளும் வெள்ளநீர் புகுந்து பாதிக்கபட்ட போது மட்டுமே ஆற்றை தூர்வாரி தண்ணீரை அப்புறபடுத்திய பொதுபணிதுறையினர் அதன் வடிகால் ஆறு மற்றும் வாய்க்கால்களை முழுமையாக தூர்வாரவில்லை.

இதனால் ஆறு முழுவதும் கோரைபுல், ஆகாயதாமரை,செடி கொடிகள் என காடு போல் காட்சியளிக்கிறது. மேட்டூர் அணை திறக்கபட்டுள்ள நிலையில் மழையும் அவ்வப்போது பொழிந்து வருகிறது. ஆனால் கோவிலார் வடிகால் ஆற்றிலோ திருநகரி வாய்க்காலிலோ தண்ணீர் வரவே வழியில்லாமல் கோரைபுல், ஆகாயதாமரை காடு போல் வளர்ந்துள்ளது.

எனவே மழைக்காலம் தொடங்கும் முன்பாக கோவிலார் வடிகால் மற்றும் திருநகரி வாய்க்கால் அனைத்து வடிகால்களிலும் ஆக்கிரமைப்பு அகற்றி தூர்வாரி சீரமைக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோயம்புத்தூர் வடவள்ளி அருகே 10-ம் வகுப்பு மாணவி தூக்கிட்டு தற்கொலை

கோயம்புத்தூர் மே.21-

கோயம்புத்தூர், வடவள்ளியில் 10-ம் வகுப்பு மாணவி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து போலீஸ் தரப்பில் கூறுகையில் 10-ம் வகுப்பு மாணவி கோவை, வடவள்ளி, பழனி கவுண்டன் புதூர் அருகே உள்ள பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்தவர் போட்டோ கிராபர் பரமசிவம் சொந்தமாக ஸ்டுடியோ வைத்து நடத்தி வருகிறார். இவரது மகள் பிரதிக் ஷா (16). இவர் கோவை வெரைட்டி ஹால் ரோடு பகுதியிலுள்ள தனியார் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வந்தார். தற்போது 10-ம் வகுப்புக்கான பொதுத் தேர்வு நடந்து வருகிறது. பிரதிக் ஷா 2 தேர்வுகளை எழுதி இருந்தார்.

இந்த நிலையில் சம்பவத்தன்று மாலை பள்ளிக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்த அவர் அறையில் திடீரென தூக்குபோட்டு தொங்கினார். இதனை பார்த்து அவரது பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக தூக்கு கயிற்றில் இருந்து பிரதிக் ஷாவை மீட்டு கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் பிரதிக் ஷா ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இது குறித்து வடவள்ளி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், தேர்வு கடினமாக இருந்ததால் மாணவி தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். தேர்வு நடந்து வரும் நிலையில் 10-ம் வகுப்பு மாணவி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கோவையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




# தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அரசு மருத்துவமனையில் ஆக்ஸிஜன் ஜெனரேட்டர் திறப்பு விழா

தஞ்சாவூர் மே.21-

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் அரசு மருத்துவமனையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தலைமையில் மதர் தெரசா பவுண்டேஷன் சார்பில் வழங்கப்பட்ட ரூ.25 இலட்சம் மதிப்பிலான ஆக்ஸிஜன் ஜெனரேட்டரினை மருத்துவமனை பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். பின்னர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் . அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறும்போது



பூதலூர் அரசு மருத்துவமனையில் கொரோனா பேரிடர் கால அவசர சிகிச்சைக்கென சான் பிரான்சிஸ்கோ வளைகுடா பகுதி தமிழ் மன்றத்தின் நிதி உதவியுடன் தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலில் மதர் தெரசா பவுண்டேஷன் மூலம் நிறுவப்பட்டுள்ள ஆக்சிஜன் ஜெனரேட்டரினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இன்றைக்கு தொடங்கப்பட்டுள்ள 100 எல்பிஎம் கொள்ளளவு கொண்ட ஆக்சிஜன் சிலிண்டர் மூலம் 20 படுக்கைகளுக்கு ஆக்சிஜன் வசதி நேரடியாக சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது. படிப்படியாக இந்த மருத்துவமனைக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) சுகபுத்ரா, இணை இயக்குனர் மருத்துவ நலப்பணிகள் திலகம், பூதலூர் ஒன்றிய பெருந்தலைவர் செல்லக்கண்ணு, பூதலூர் அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவ அலுவலர் உஷா நந்தினி, மதர் தெரசா பவுண்டேஷன் சேர்மன் சவரிமுத்து, ரெட்கிராஸ் பொருளாளர் முத்துக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை சோழிங்கநல்லூர் மண்டல அலுவலகத்தில் பணியின்போது அலுவலக உதவியாளர் தூக்கிட்டு தற்கொலை

சென்னை மே.21-

சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டல அலுவலகத்தில் பணியின்போது அலுவலக உதவியாளர் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார்.



சென்னை, திருவல்லிக்கேணி, முனுசாமி நகரை சேர்ந்தவர் சத்தியமூர்த்தி (54). இவர், சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15-வது மண்டல அலுவலகத்தில் 7 ஆண்டுகளாக அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்தார். இவர், சரிவர வேலைக்கு வராமல் இருந்துள்ளார்.

இது சம்பந்தமாக கடந்த 5-ந் தேதி சத்தியமூர்த்திக்கு அலுவலகத்தில் இருந்து 'மெமோ 'கொடுத்து விளக்கம்கேட்டனர்.இந்த நிலையில் சத்தியமூர்த்தி சோழிங்கநல்லூர் மண்டல அலுவலகத்திற்கு வேலைக்கு வந்த சத்தியமூர்த்தி நண்பகல் நேரத்தில் மண்டல அலுவலக மொட்டை மாடியில் திடீரென தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து தகவல் அறிந்து வந்த செம்மஞ்சேரி போலீசார், சத்தியமூர்த்தி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது பற்றி வழக்குப்பதிவு செய்த போலீசார், பணிச்சுமை காரணமாக சத்தியமூர்த்தி தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்ற கோணத்தில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மகளிருக்கான உலகச் சாம்பியன்ஷிப் குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் நிகாத் சரீன் தங்கப்பதக்கம் வென்று சாதனை

துருக்கி மே.21-

துருக்கியில் நடைபெற்று வரும் மகளிருக்கான உலக சாம்பியன்ஷிப் குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் நிகாத் சரீன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

52 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற அவர், அரையிறுதியில் பிரேசிலின் கரோலின் டி அல்மிடாவை எதிர்கொண்டார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சரீன், 5-0 என்ற கணக்கில் வெற்றியை ஈட்டி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். தங்கப் பதக்கத்திற்கான இறுதிப்போட்டியில்



தாய்லாந்தின் ஜிட்பாங் உடன் பலப்பரீட்சை நடத்தினார் நிகாத் சரீன்.

முதல் சுற்றில் நிகாத் சரீன் மற்றும் தாய்லாந்தின் ஜூடாமாஸ் ஜிட்பாங் ஆகியோர் ஒருவருக்கொருவர் சரமாரியாக குத்துக்களை வீசியதால், ஆட்டம் உச்சகட்ட பரபரப்பில் நடைபெற்றது. இரண்டாவது சுற்றும் அதே போல் கடும் போட்டி மிக்கதாகவே அமைந்தது. போட்டி முழுவதும் நிகாத் தனது முன்னிலையை தக்க வைத்துக் கொண்டார்.

ஐந்து நடுவர்களும் சண்டையை 10-9 என்ற கணக்கில் முதல் இரண்டு சுற்றுகளில் நிகாத்துக்கு ஆதரவாக மதிப்பெண் அளித்தனர். இறுதிச் சுற்றிலும் அவர் முன்னிலை வகித்தார். நடுவர்கள் 5-0 என்ற கணக்கில் ஏகமனதாக நிகாத் வெற்றி பெற்றதை அறிவித்ததை அடுத்து நிகாத் மகிழ்ச்சியில் மூழ்கினார். மேரிகோமிற்கு அடுத்தபடியாக தங்கப்பதக்கத்தை கைப்பற்றி வரலாறு படைத்துள்ளார் நிகாத் சரீன்.

# சாதி மதம் கடந்த ஒற்றுமையால் மட்டுமே கலவரங்களைத் தடுக்க முடியும்



## நா.முத்துநிலவன் பேச்சு

புதுக்கோட்டை மே,21

புதுக்கோட்டையில் தமிழக மக்கள் ஒற்றுமை மேடை நிகழ்வு நடைபெற்றது. திமுக மேனாள்நகரச்செயலாளர் நயினாமுகமது நிகழ்வுக்குத் தலைமை ஏற்றார். மக்கள் ஒற்றுமை மேடை எஸ்.ஆரோக்கியசாமி அனைவரையும் வரவேற்றார், காங்கிரஸ் கட்சியின் அ.சந்திரசேகரன், இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் கவிவர்மன், திராவிடர் கழகத்தின் மாவட்டத் தலைவர் அறிவொளி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திலீபன், இந்திய யூனியன் முஸ்லிம்லீக் கட்சியின் தலைவர் முகமது அஷ்ரப் அலி, மனிதநேய மக்கள் கட்சியின் அப்துல் கனி, இந்திய ஜனநாயக மாதர்சங்கத்தின் மாவட்டச் செயலர் சலோமி, புதுக்கோட்டை நாணயவில் கழகத்தின் சே.தா.பஷீர் அலி ஆகியோர் முன்னிலை வகித்தும் வாழ்த்துரை வழங்கியும் சிறப்பித்தனர்.

அவரவர் விழா அவரவருக்கு, இதில் என்ன பிணக்கு எனும் தலைப்பில் பேசிய கவிஞர் நா.முத்துநிலவன் மேலும் பேசும்போது, மொழியும் மதமும் பண்பாட்டின் அடையாளங்கள். ஒவ்வொரு மாநிலமும் அதற்குரிய மொழி உணவு உடை பண்பாடுகளோடு வாழ்வதுதான் இந்திய ஒன்றியத்தின் அழகும் பெருமையும் ஆகும். இதில் ஒரே மொழி, ஒரே வரி, ஒரே குடும்ப அட்டை, ஒரே தேர்தல் எனும் முழக்கங்கள் மக்களின் பன்முகப் பண்பாட்டுக்கு அச்சம் தருவதாகவே இருக்கமுடியும். இதை ஏற்க முடியாது சாதி மதம் கடந்த ஒற்றுமையால் மட்டுமே கலவரங்களைத் தடுக்க முடியும் இவ்வாறு கவிஞர் நா.முத்துநிலவன் பேசினார்.

கவிஞர் கவிபாலா கவிதை வாசித்தார். கூட்டத்தில் மக்கள் ஒற்றுமையைக் கட்டிக் காப்பாற்றும் சமூக நல்லிணக்கக் குழுக்களை மாவட்டத் தலை நகரங்களில் அமைக்கக் கோரும் தீர்மானத்தை கலைவிமர்சகரும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் புதுக்கோட்டை நகரத் தலைவருமான ஜெயபால் முன்மொழிந்தார். மதவெறிகிளப்பும் அமைப்புகளைத் தடை செய்ய வேண்டும் என்னும் தீர்மானத்தை ரகுமான் முன்மொழிய கணேசன் வழிமொழிந்தார். இரண்டு தீர்மானங்களும் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரின் கரவொலி மூலம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

நிகழ்ச்சியில், திமுக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட், த.மு.மு.க., உள்ளிட்ட கட்சிகள் தமுஎகச உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். கூட்டத்தை மக்கள் ஒற்றுமை மேடையின் ஒருங்கிணைப்பாளர் மு. அசோகன் தொகுத்துரைக்க , அ.மணவாளன் நன்றி கூறினார். கலந்துகொண்ட சான்றோர் அனைவர்க்கும் மாலைக்குப் பதிலாக நூல்கள் வழங்கப்பட்டன.



புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று, கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி தலைமையில் அனைத்து அலுவலர்களும் பணியாளர்களும் ஏற்றுக்கொண்டனர். உடன் கலெக்டரின் நேர்முக உதவியாளர் தங்கவேல் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழகத்தில் முன் உதாரணமாக செயல்படும் தென்காசி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தில் நேற்று பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் உருவப்படத்தை வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் செங்கோட்டை நகர்மன்றத் தலைவி ராமலட்சுமி, நகர்மன்றத் துணைத் தலைவர் நவநீதகிருஷ்ணன், பாரதிய ஜனதா கட்சி மாவட்ட தலைவர் ராஜேஷ் ராஜா, கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா, பாஜக பொதுக்குழு உறுப்பினர் சீனிவாசன், மாவட்ட பொருளாளர் ராமநாதன், மாவட்ட செயலாளர் மாரியப்பன், மாவட்ட அமைப்பு சாரா பிரிவு துணைத் தலைவர் பேச்சிமுத்து, நகர தலைவர் வேம்பு ராஜ், துணைத்தலைவர் கோமதிநாயகம், பொதுச் செயலாளர் மணிகண்டன், பொருளாளர் செண்பகராஜன், செயலாளர் சுப்பிரமணியன், நகர தலைவர் விங்பாலகிருஷ்ணன், 17வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் ராம்குமார், அதிமுக நகர செயலாளர் கணேசன், மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# ஆலங்குடியில் கஞ்சா விற்ற வாலிபர் கைது

ஆலங்குடி,மே.21-

ஆலங்குடி அருகே உள்ள கலிபுல்லா பாரதி நகரைச்சேர்ந்த முகமது கனி மகன் முகமது இப்ராகிம் (23) இவர் அப்பகுதியில் கஞ்சா விற்று வருவதாக ஆலங்குடி போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் ஆலங்குடி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் குணசேகரன் மற்றும் போலீசார் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்,



அப்போது அவரை அப்பகுதியில் வைத்து கைது செய்தனர்.மேலும் அவரிடம் இருந்து கஞ்சாவையும் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பாக அவரை ஆலங்குடி காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தனர் மேலும் ஆலங்குடி காவல் ஆய்வாளர் அழகம்மை விசாரித்ததில் உண்மையை ஒப்புக்கொண்டதன் பேரில் வழக்குப்பதிவுசெய்தபோலீசார் கந்தர்வகோட்டை நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தி புதுக்கோட்டை சிறையில் அடைத்தனர்.

# சென்னையில் சொத்துக்காக தந்தையை மகனே கொலை செய்த கொடூரம்

சென்னை மே.21-

வளசரவாக்கத்தில் சொத்துக்காக தந்தையை கொலை செய்து உடலை துண்டு துண்டாக வெட்டி காவேரிப்பாக்கத்தில் உள்ள நிலத்தில் புதைத்த மகனை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

சென்னை வளசரவாக்கம், ஆற்காடு சாலையை சேர்ந்தவர் குமரேசன் (80), இவரது மகள் காஞ்சனா, தனது தந்தை குமரேசனை காணவில்லை என்று வளசரவாக்கம் போலீசில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் வளசரவாக்கம் போலீசார் அந்த வீட்டிற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

அப்போது வீட்டிற்குள் ரத்த கரைகள் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த போலீசார், அவரது உறவினர்களிடம் விசாரணை நடத்தினர். அப்போது குமரேசனின் மகன் குணசேகரன் (50), தலைமறைவாக இருப்பது தெரியவந்தது. இதையடுத்து நடத்தப்பட்ட விசாரணையில் சொத்துக்காக தனது தந்தையை கொலை செய்து அவரது உடலை துண்டு துண்டாக வெட்டி காவேரிப்பாக்கத்தில் உள்ள அவருக்குச் சொந்தமான இடத்தில் புதைத்திருப்பது தெரியவந்தது.

தகவலையடுத்து வளசரவாக்கம் போலீசார், காவேரிபாக்கம் சென்று குமரேசனின் உடலை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்து விசாரணை நடத்த முடிவு செய்துள்ளனர். மேலும் இந்த கொலை சொத்துக்காக நடந்ததா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்ற கோணத்தில் விசாரித்து வரும் போலீசார், தலைமறைவாக உள்ள குணசேகரனை தேடி வருகின்றனர்.

தந்தையை கொலை செய்து உடலை துண்டு துண்டாக வெட்டி அவர்களுக்கு சொந்தமான இடத்தில் புதைத்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.






Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# கள்ளக்குறிச்சியில் அனைத்து துறை அலுவலர்களும் கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு



கள்ளக்குறிச்சி மே.21-

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியானது மே 21 கொடுஞ்செயல் எதிர்ப்பு தின நாள் (சனிக்கிழமை) அரசு விடுமுறை நாளில் வருவதால் நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் ஸ்ரீதர் தலைமையில் கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழியை அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

அப்பொழுது அகிம்சை, சகிப்புத்தன்மை ஆகிய நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கையுடைய இந்திய மக்களாகிய நாம், எவ்வகையான கொடுஞ்செயல்களையும், வன்முறைகளையும் முழு ஆற்றலோடு எதிர்ப்போம் என உறுதி கூறுகிறோம்.

எல்லா மக்களிடத்தும், அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிர்களுக்கும் மற்றும் நற்பண்புகளுக்கும் ஊறு விளைவிக்கும் பிரிவினைச் சக்திகளை எதிர்த்துப் போராடவும், நாம் உறுதி கூறுகிறோம் என்ற உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அனைத்து அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுரேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சாந்தி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சுப்பரமணி மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## ஹைதராபாத்தில் ஒரு மணி நேர

# அறுவை சிகிச்சையின் மூலம் 206 சிறுநீரக கற்களை அகற்றி மருத்துவர்கள் சாதனை





ஹைதராபாத் மே.21-

ஹைதராபாத்தில் நோயாளி ஒருவருக்கு 206 சிறுநீரகக் கற்கள் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டிருக்கிறது.

தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்தை சேர்ந்த ராமலக்ஷ்மையா என்பவர் (56) கடந்த சில மாதங்களாகவே சிறுநீரக கல் பிரச்சனையால் அவதிப்பட்டு வந்துள்ளார். இதற்காக ஹைதராபாத்தில் உள்ள அவேர் க்ளேனேகிள்ஸ் குளோபல் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த அவருக்கு சமீபத்தில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஒரு மணி நேர அறுவை சிகிச்சைக்குப் பிறகு 206 சிறுநீரகக் கற்களை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

நோயாளிக்கு ஆலோசனை வழங்கப்பட்டு, ஒரு மணி நேரம் நீடிக்கும் கீஹோல் அறுவை சிகிச்சைக்கு தயார்படுத்தப்பட்டதாகவும், அப்போது அனைத்து சிறுநீரக கற்களும் அகற்றப்பட்டதாகவும் மருத்துவர்கள் கூறினர். இந்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு ராமலக்ஷ்மையா முழுமையாக குணமடைந்து, இரண்டாவது நாளில் வீடு திரும்பியுள்ளதாகவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

போதிய தண்ணீர் அருந்தாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சிறுநீரகங்களில் கற்கள் உருவாகலாம் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். போதியளவு நீர் அருந்தி உடலில் நீர்ச்சத்து குறைந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

# மருத்துவக் கல்லூரிக்கு செல்லும் சாலையில் மின்விளக்கு எம்எல்ஏ முத்துராஜா தொடங்கி வைத்தார்



**புதுக்கோட்டை மே.21-**

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிய கொடுத்த புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜாவிற்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்து வருகின்றனர்.

புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முள்ளூர் ஊராட்சி புதுக்கோட்டை மருத்துவ கல்லூரிக்கு செல்லும் சாலையில் இரவு நேரங்களில் தெருவிளக்குகள் இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இதை தேர்தல் நேரத்தில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரிக்கு செல்லும் சாலையில் தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தார். அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் நிதியிலிருந்து மின்விளக்கு அமைக்கும் பணிகள் நடைபெற்று முடிந்தன.

மருத்துவ கல்லூரிக்கு செல்லும் சாலை சிட்கோவிலிலிருந்து மருத்துவக் கல்லூரி வரை தெருவிளக்குகள் இணைப்புகள் கொடுக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு நேற்று வந்தது எம்எல்ஏ கலந்துகொண்டு மின் வினியோகத்தை துவக்கிவைத்தார். இந்நிகழ்வில் மாநிலவர்த்தக அணி துணை செயலாளர் அசோக் பாண்டியன், மாவட்ட பொருளாளர், செந்தில் அவர்கள் முள்ளூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஆதிஸ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் மின்வாரிய அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.



▶ புதிய பஸ் நிலையத்தை வேறு இடத்தில் அமைப்பதை கண்டித்து கடலூரில் அதிமுகவினர் ஆர்ப்பாட்டம். முன்னாள் அமைச்சரும் கடலூர் மாவட்ட வடக்கு மாவட்ட அதிமுக செயலாளருமான எம்.சி.சம்பத் தலைமையில் கடலூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



▶ கடலூர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் தேசிய மாஸ்டர்ஸ் அத்லடிக்ஸ் மீட் 2022 நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சியில் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் போட்டிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

## கோவாவில் காதலை தொடர மறுத்த

# கல்லூரி மாணவியை காதலன் கத்தியால் குத்தி கொன்ற கொடூரம்

கோவா மே.21-

கோவாவில் காதலை தொடர மறுத்த கல்லூரி மாணவியை கத்தியால் குத்தி கொன்ற காதலன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோவாவில் உள்ள வெல்சான் கடற்கரையில் காதலை தொடர மறுத்த கல்லூரி மாணவியை கத்தியால் குத்தி கொலை செய்த 26 வயதான கிஷன் கலங்குட்கர் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர். கொலையாளிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவன் கூறுகையில், தானும் அங்குள்ள கல்லூரி ஒன்றில் படிக்கும் மாணவி ஒருவரும் காதலித்து வந்துள்ளதாக கூறினார்.

மேலும் வெல்சான் கடற்கரைக்கு இருவரும் சென்றபோது, அப்பெண் காதலை தொடர விரும்பவில்லை என்றும், இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்றும் கூறினாள். இதனால், ஆத்திரமடைந்து கத்தியால் பல முறை குத்தி கொலை செய்ததாக தெரிவித்தார். மேலும், உடலை கடற்கரையோரம் உள்ள புதரில் வீசி சென்றதாக தெரிவித்தான். பெண்ணின் உடலை கைப்பற்றிய போலீசார், குற்றவாளியை 24 மணி நேரத்திற்குள் பிடித்தனர். மேலும் இந்த கொலை சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.



▶ காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறையின் சார்பில் காஞ்சீபுரம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கான ஒரு நாள் புத்தாக்க பயிற்சி மாவட்ட கலெக்டர் மா.ஆர்த்தி தலைமையில் நடைபெற்றது.



▶ தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் கி.செந்தில்ராஜ் முன்னிலையில் எயிட்ஸ் நோயினால் மரணமடைந்தவர்களுக்கு அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவஞ்சலி செலுத்தினர்.



▶ ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், திருஉத்திரகோ சமங்கை கிராமத்தில் மாவட்ட கலெக்டர் சங்கர் லால் குமாவத், மாநில நெடுஞ்சாலை திட்டப்பணிகளை ஆய்வு செய்தார்.

## உளுந்தூர்பேட்டை அருகே

# சுப நிகழ்ச்சிக்கு சென்று திரும்பும் போது வேன் கவிழ்ந்து விபத்து



கள்ளக்குறிச்சி மே.21-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பாலி கிராமத்தை சேர்ந்த தங்கராசு என்பவர் தனது மகள் வழி பேத்தியின் மஞ்சள் நீராட்டு விழாவிற்கு உறவினர்கள் 30 பேருடன் மகேந்திரா மேக்ஸ் வேனில் கள்ளக்குறிச்சி மாவட்டம், விருகாவூர் கிராமத்தில் நடைபெற்ற மஞ்சள் நீராட்டு விழாவில் கலந்து கொண்டு சொந்த ஊருக்கு திரும்பி சென்று கொண்டிருந்த பொழுது உளுந்தூர்பேட்டை வட்டம், ஆசனூர் சிப்காட் அருகே வந்தபோது ஓட்டுநர் பக்கிரியின் கட்டுப்பாட்டை இழந்து வேன் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர், இதில் பாலி பகுதியை சேர்ந்த ஏழுமலை 42, ஆறுமுகம் 52, வீரம்மாள் 35, சுசீலா 35, மல்லிகா 40, செல்வி 30, சீதாலட்சுமி 70, தெய்வானை 27, உஷா 34, கொளஞ்சி 50, முருகவேல் 47, கொளஞ்சிநாதன் 50, பரிமளா 33 உள்ளிட்ட 20 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த எடைக்கல் காவல் நிலைய காவல்துறையினர், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விபத்தில் சிக்கியவர்களை மீட்டு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் இந்த விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 48,000 கன அடியாக அதிகரிப்பு

**குளிக்க, பரிசல் இயக்க தடை**



சென்னை, மே 21

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் அளவு அதிகரித்துள்ளதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து நேற்று காலை வினாடிக்கு 48 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் அருவிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மட்டுமல்லாது தமிழகத்தில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான அஞ்செட்டி, கேரட்டி, ராசி மணல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழைப் பொழிவு அதிகரித்துள்ளது.

காவிரியில் நீர்வரத்து நேற்று முன்தினம் மாலை வினாடிக்கு 20 ஆயிரம் கன அடியாகக் குறைந்த நிலையில், நேற்று காலை 48 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெயது வருவதால், நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் நீர்வரத்து தொடர்ந்து கணக்கிடப்படுகிறது. ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், பரிசல் இயக்கவும், அருவிகளில் குளிக்கவும் விதிக்கப்பட்ட தடை நீடிக்கிறது. காவிரி ஆற்றங்கரையோர பகுதிகளுக்கு மக்கள் செல்ல வேண்டாம்எனஎச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணைக்கு நேற்று காலை வினாடிக்கு 29,964 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,500 கன அடி நீர் மட்டுமே திறக்கப்பட்டிருகிறது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 112.77 அடியாக உயர்ந்துள்ளது. ஒரே நாளில் அணை நீர்மட்டம் 1.67 அடி உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 82.40 டி.எம்.சியாக உள்ளது. பருவ மழைக்கு முன்பாகவே அணையின் நீர்மட்டம் வேகமாக உயர தொடங்கியது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ள தடுப்பு நடவடிக்கைக்கு ரூ.184 கோடி ஒதுக்கீடு

சென்னை மே.21-

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ள தடுப்பு நடவடிக்கைக்கு ரூ.184 கோடி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ள தடுப்பு நடவடிக்கைக்கு ரூ.184 கோடி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. திருப்புகழ் ஐஏஎஸ் கமிட்டி அறிக்கையின் படி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நிரந்தர வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை பரிந்துரைக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆலந்தூர், சோழிங்கநல்லூர், வண்டலூர், தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் நிரந்தர வெள்ள தடுப்பு பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# சென்னையில் போதை மாத்திரை வாங்கி தருவதாக பணத்தை வாங்கி கொண்டு ஏமாற்றிய வாலிபர் குத்திக்கொலை

சென்னை மே.21-

போதை மாத்திரை வாங்கி தருவதாக கூறி பணத்தை வாங்கி ஏமாற்றியதால் வாலிபர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக 3 பேர் போலீசில் சரண் அடைந்தனர்.

சென்னை, கொருக்குப்பேட்டை, ஹரிநாராயணபுரத்தைச் சேர்ந்தவர் ராகுல் (19). இவர், பழைய கிளாஸ் பேக்டரி சாலையோரம் பலத்த கத்திக்குத்து காயங்களுடன் உயிருக்கு போராடி கொண்டிருந்தார். யாரோ மர்ம நபர்கள் அவரை கத்தியால் குத்திவிட்டு தப்பி ஓடியது தெரிந்தது. அருகில் இருந்தவர்கள் உடனடியாக ராகுலை சிகிச்சைக்காக அரசு ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி நள்ளிரவில் ராகுல் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து ஆர்.கே .நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து ராகுலை கொலை செய்தவர்கள் யார்? என விசாரித்து வந்தனர்.

இதற்கிடையில் இந்த கொலையில் தொடர்புடைய 3 பேர், ஆர்.கே .நகர் போலீஸ் நிலையத்தில் சரண் அடைந்தனர். விசாரணையில் அவர்கள், கொருக்குப்பேட்டை, மீனாம்பாள் நகரைச் சேர்ந்த சங்கர் என்ற கவுரி சங்கர் (25), கொருக்குப்பேட்டை, பென்சில் பேக்டரி சாலையைச் சேர்ந்த ரகுமான் (20), தண்டையார்பேட்டையை சேர்ந்த சரவணன் (20) என தெரியவந்தது. பின்னர் 3 பேரும் போலீசாரிடம் அளித்துள்ள வாக்குமூலத்தில், கொலையான ராகுல், கடந்த 15-ந்தேதி போதை மாத்திரைகள் வாங்கி தருவதாக கூறி எங்கள் 3 பேரிடமும் ரூ.20 ஆயிரம் வாங்கினார். ஆனால் சொன்னபடி போதை மாத்திரைகளையும் வாங்கி தராமல், பணத்தையும் திருப்பி தராமல் இழுத்தடித்து வந்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த நாங்கள், பழைய கிளாஸ் பேக்டரி சாலைக்கு, ராகுலை வரவழைத்து நாங்கள் கொடுத்த பணத்தை திருப்பி தருமாறு கேட்டோம். அப்போது எங்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த நாங்கள் 3 பேரும், ராகுலை கத்தியால் சரமாரியாக குத்திவிட்டு தப்பி ஓடிவிட்டோம். இதில் படுகாயம் அடைந்த அவர் உயிரிழந்து விட்டார். இவ்வாறு அவர்கள் வாக்குமூலத்தில் கூறி இருப்பதாக போலீசார் தெரிவித்தனர். இதையடுத்து 3 பேர் மீதும் கொலை வழக்குப்பதிவு செய்த போலீசார், அவர்களை கைது செய்து மேலும் விசாரித்து வருகின்றனர்.




# ஸ்டெர்லைட் விவகாரத்தில் தமிழக அரசு பதிலளிக்க உத்தரவு

# ஸ்டாலினுக்கு பின் உதயநிதி முதல்வர் ஆவார்





# போதை மாத்திரை கொருக்குப்பேட்டையில் கொலை

சென்னை / புதுக்கோட்டை | 21.05.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

21.05.2022 சனி

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சி. வி. நரசிம்மன் , ஐநா உயர் அலுவலர், எழுத்தாளர் (பி, 1915) (இ. 2003)



சஞ்சய் சுப்ரமணியம் , இந்தியவியலாளர், வரலாற்றாளர் (பி, 1961)



மோகன்லால் , தென்னிந்தியத் திரைப்பட நடிகர் (பி, 1960)



## இன்றைய நினைவு நாள்

ராஜீவ் காந்தி , இந்தியாவின் 6வது பிரதமர் (பி.1944) (இ.1991)



தேன்மொழி ராசரத்தினம் , விடுதலைப் புலிகளின் போராளி (பி.1974) (இ.1991)



ஆர். உமாநாத் , இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி.1922) (இ.2014)



## பன்னாட்டுத் தேயிலை நாள்

## உரையாடல் மற்றும் மேம்பாட்டுக்கான கலாச்சார பன்முகத்தன்மைக்கான உலக தினம்

## தேசிய பயங்கரவாத எதிர்ப்பு தினம் (இந்தியா)

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,

பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

தொடர்புக்கு: 04322 261577

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்